தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (20.11.2023) தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் பராமரிப்புத் துறை சார்பில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 8 இளநிலை உதவியாளர் (நிலை 3) மற்றும் 1 சுருக்கெழுத்து தட்டச்சு பணிகளுக்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார். போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கே.பணீந்திர ரெட்டி, தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் பரமரிப்புத் துறை இயக்குநர் கொ.செந்தில் வேல் மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருவண்ணாமலையில் கலைஞர் நூற்றாண்டு விழா

பெண்கள் நிலை உயர திட்டம் - தீட்டுவதுதான் திராவிட மாடல் ஆட்சி!

பொதுமக்களுக்கு நல உதவிகள் வழங்கி அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, நவ. 22-

பெண்கள், தாய்மார்களின் நிலை உயர்ந்திட திட்டம் தீட்டி, நடைமுறைப்படுத்துவதுதான் திராவிட மாடல் ஆட்சி என்று திருவண்ணாமலையில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழா நலஉதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு பேசும் போது, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் குறிப்பிட்டார்.

19.11.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு, திருவண்ணாமலை, முத்து விநாயகர் கோயில் தெரு, சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நகர தி.மு.க. சார்பில் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம் தலைமை வகித்தார்.

நகர நிர்வாகிகள் ஜீவரே காவிஜயராஜ், குட்டி க.புகழேந்தி, அ.கண்ணன்,கோல்டு எஸ்.பிரபு, ஹக்கிம்சேட், நகர மன்ற உறுப்பினர் இராணி முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் அனைவரையும் வரவேற்புப் பேசினார்.

கலைஞர் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு, பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு ஆயிரக்கணக்கான மகளிருக்கு நலஉதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார். அவர் ஆற்றிய உரையிலிருந்து.

எல்லோருக்கும் எல்லாமும் என்பதுதான் திராவிட மாடல் ஆட்சி, முதலமைச்சர் அண்ணன் ஸ்டாலின் ஆணையை ஏற்று, கேரள மாநில வைக்கத்தில் நம்மையெல்லாம் ஆளாக்கிய தந்தைப் பெரியாருக்கு தமிழ் நாடு அரசின் சார்பாக நூலகம் கட்டப்பட்டு வருகிறது. அதன் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்து விரைவுப்படுத்தி விட்டு வந்திருக்கிறேன்.

நாம் கலைஞரின் பிறந்த நாளை கொண்டாடவில்லை என்று சொன்னால், நன்றி கொன்றவர்களாக விடுவோம். இன்றைக்கு சென்னையிலிருந்து, கன்னியாகுமரி வரை 38 வருவாய் மாவட்டங்கள், 21 மாநகராட்சிகள், 135க்கும் மேற்பட்ட நகராட்சிகள், 550 பேரூராட்சிகள், 12500 கிராம ஊராட்சிகள் உள்ளன. இவற்றிளெல்லாம் கலைஞரின் அடையாளங்கள் நிறைய இருந்து கொண்டே இருக்கும். இந்த பள்ளி கலைஞர் திறந்தது. இந்த கல்லூரி கலைஞர் தந்தது. இந்த மேநீர் தேக்கத் தொட்டி கலைஞர் ஆட்சியில் கொண்டுவரப்பட்டது. பல ஆண்டுகாலம் ஏங்கிய மருத்துவமனை கலைஞரால் வந்தது. வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வந்த அரசு அலுவலகக்கெல்லாம் சொந்தமாக புதிய அலுவலகம் வந்தது கலைஞர் ஆட்சியில்தானே என கலைஞரின் அடையாளங்கள் காலத்திற்கும் அழியாமல் நீண்டு கொண்டே இருக்கும்.

ஏன், நமது மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் வடஆற்காடு மாவட்டத்திலிருந்து தனியாக திருவண்ணாமலைக்கு மாவட்டம் பிரித்து கொடுத்தது கலைஞர்தானே. மைசூர் அரண்மனையைப் போல மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டித்தந்ததும் கலைஞர்தானே. முன்பெல்லாம் நமது போக்குவரத்திற்கு மண்டல அலுவலகம் விழுப்புரம்தானே, திருவண்ணாமலைக்கு தனியாக மண்டலம் பிரித்துக் கொடுத்தது யார் தலைவர் கலைஞர் தானே.

இங்கே தீபத்திருவிழா களைக்கட்டியிருக்கிறது, தேர் திருவிழா நடைபெறயிருக்கிறது. உங்களைப் பார்த்து நான் கேட்கிறேன். அண்ணாமலையார் கோவில் இருந்தால்தானே திருவிழா, ஊர்கூடி தேர் இழுக்க முடியும். அன்றைக்கு மத்தியில் ஆண்டு கொண்டிருந்த பாரதிய ஜனதா அரசின் அமைச்சர் ஜக்மோகன் நமது அண்ணாமலையார் கோயிலை தொல்லியல்துறை கையகப் படுத்த ஆணையிட்டாரே. இந்த அண்ணாமலையார் கோயிலை மீட்டுக்கொடுத்த புண்ணியவான் அய்யா கலைஞர்தானே. அதனால் தான் நாம் அவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இதைப்போல பெண்கள் எட்டாவது வரை படித்தால் திருமண உதவித் தொகை ரூ.5ஆயிரம் என்றும், 10ஆயிரம் என்றும், 25 ஆயிரம் என்றும் உயர்த்திக் கொண்டேபோய் பெண்களை இன்றைக்கு படிக்க வைத்திருக்கிறார். ஆண் பிள்ளைகளை மட்டுமே படிக்க வைத்த குடும்பத்தில், இன்றைக்கு பெண்களும் கல்லூரிகளில் பயின்றிட, புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் மாதம் ரூ.5ஆயிரம் வழங்குகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

காலையிலிருந்து இரவு வரை குடும்பத்திற்காக அயராது பாடுபடும் குடும்பத் தலைவிகளுக்கு, தன்னம்பிக்கை ஊட்டிட, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மாதம் ரூ. ஆயிரம் வழங்குகிறார். சமூக புரட்சி திட்டமாக பெண்கள் பயணித்திட கட்டணமில்லா பேருந்து பயணம் தந்தவர் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் பெண்கள், தாய்மார்கள் நிலை உயர்திட திட்டங்கள் தீட்டி, அதை நடைமுறைப்படுத்துவதுதான் திராவிட மாடல் ஆட்சி. இவ்வாறு பேசினார்.

விழாவில் மாநில மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

விழாவில் மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, ஏ.ஏ.ஆறுமுகம், இரா.கார்த்திகேயன், ஏ.டபள்யு.சர்தார், நகரமன்றத் துணைத் தலைவர் சு.ராஜாங்கம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.கண்ணதாசன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கிரிக்கெட் க.ரவி, அ.மோகன் ராஜ், மு.தினேஷ்பாபு, இல.மின்னல்.பாபு, எஸ்.சமயராஜ், எஸ்.வி.ஆர்.மணிகண்டன், இரா.இராஜசேகர், டி.பென்ராபர்ட், சௌகத் பாஷா, ராயல் தியாகு, சி.கே.சசிக்குமார், பா.முர்பத், ஏ.கோவிந்தன், எழில் மாறன், கஜபதி, வி.எஸ்.ரவிந்திரன், டி.எல்.எம்.வினோத்குமார், எஸ்.கே.டி.வீரா, வழக்கறிஞர் ம.செந்தில், டி.என்.மனோகரன், அ.வடிவேல், நகரமன்ற உறுப்பினர் உதயாரவி, பி.ஜெயபால், கே.கே.ஷா, டி.ஏ.முருகன், லால்ஜவஹர், அலிமுகமது உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக வட்டச் செயலாளர் வழக்கறிஞர் வி.எஸ்.இரவிந்திரன் நன்றி கூறினார்.

முன்னதாக செல்லங்குப்பம் சுப்பிரமணியின் நாட்டுப்புறப்பாடல்கள் நிகழ்ச்சி நடைபெற்றது.

கடலூரில் நடைபெற்ற 70-வது அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் அமைச்சர் சி.வெ.கணேசன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர், அருண் தம்புராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள், சபா ராஜேந்திரன், கோ.ஐயப்பன், மாநகராட்சி மேயர் திருமதி.சுந்தரி ராஜா மற்றும் துணை மேயர் தாமரைச்செல்வன், அரசு துறை அலுவலர்கள் உள்ளனர்.

சென்னை மாவட்டம்: 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் குறித்த கூட்டம்!

மாநகராட்சி ஆணையாளர் ஜெ.இராதாகிருஷ்ணன் பங்கேற்பு!

சென்னை, நவ. 22-

சென்னை மாவட்டத்தில் உள்ளடக்கிய 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம்2024 குறித்த ஆலோசனைக் கூட்டம் சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் / கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் முன்னிலையில், சென்னை மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர் / இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆணையாளர் திருமதி மைதிலி கே. ராஜேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (20.11.2023) ரிப்பன் கட்டட அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையம் 01.01.2024 தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு சிறப்பு சுருக்க திருத்தம் 2024-இன் கீழ் வாக்காளர் பட்டியல் வெளியிட உத்தரவிட்டது, அதன் படி சென்னை மாவட்டத்தை உள்ளடக்கிய 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் 27.10.2023 அன்று அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) அவர்களால் வெளியிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, வரைவு வாக்காளர் பட்டியலை பொதுமக்கள் பார்வையிட ஏதுவாக 27.10.2023 முதல் 09.12.2023 வரை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகங்கள் 4, 5, 6, 8, 9, 10, 13 மற்றும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்களது பெயர்கள் மற்றும் குடும்பத்தாரின் பெயர்கள் குறித்த விவரங்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனவா அல்லது இல்லையா என்பது குறித்து சரிபார்த்துக் கொள்ளவும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் உள்ளவர்கள் மற்றும் 01.01.2024 அன்று 18 வயது பூர்த்தி அடைபவர்கள் படிவம் 6ஐ பூர்த்தி செய்தும், பெயர்கள் நீக்கம் தொடர்பாக படிவம் 7ஐ பூர்த்தி செய்தும், சட்டமன்றத் தொகுதிக்குள்ளேயே ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குடிபெயர்ந்து புதிய வசிப்பிடத்தில் உள்ளவர்களும், மேலும் வேறு தொகுதிக்கு குடிபெயர்ந்தவர்களும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க மற்றும் திருத்தங்கள் செய்ய படிவம் 8ஐ பூர்த்தி செய்தும், அதற்கான ஆவண ஆதார நகலினை இணைத்தும் சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரின் அலுவலகத்தில் 27.10.2023 முதல் 09.12.2023 முடிய உள்ள காலத்திற்குள் விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், 25.11.2023 மற்றும் 26.11.2023 (சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில்) ஆகிய நாட்களில் வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன. அந்த முகாம் நாட்களையும் படிவங்கள் 6, 6A. 7 மற்றும் 8 வழங்க பயன்படுத்திக் கொள்ளலாம். பொதுமக்கள் https://voters.eci.gov.in/ என்ற இணையதளம் மூலமாகவும், தங்களுடைய பெயர்கள் சேர்த்தல், நீக்கம் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள விண்ணப்பிக்கலாம்.

இப்பணிகளை ஆய்வு செய்ய சென்னை மாவட்டத்திற்கு வாக்காளர் பட்டியலுக்கான பார்வையாளராக இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆணையாளர் திருமதி மைதிலி கே.ராஜேந்திரன், தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் / கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் முன்னிலையில், சென்னை மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர் / இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆணையாளர் தலைமையில் தேர்தல் பதிவு அலுவலர்கள், உதவி தேர்தல் பதிவு அலுவலர்களுடனான வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் 2024 குறித்த ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/வட்டார துணை ஆணையாளர்கள் எம்.பி. அமித், (தெற்கு), கே. ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு), மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்) (பொ) குலாம் ஜிலானி பாபா, தேர்தல் பதிவு அலுவலர்கள், உதவி தேர்தல் பதிவு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டம்

ஆலத்தூர் மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சோமு.மதியழகன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற டாக்டர் செ.வல்லபன், எம்.பி.,பி.எஸ்., (1 வது வார்டு, செட்டிக்குளம் & அஞ்சல், ஆலத்தூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்) அவர்கள் ஆலத்தூர் மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 20.11.2023

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பு!

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தினர் அலைகடலென திரண்டு வாரீர்!

மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

கிருஷ்ணகிரி, நவ. 22-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி செயலாளரும்,

தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்றும் நாளையும் (22 மற்றும் 23 தேதிகளில்) இரண்டு நாட்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தருகிறார்.

இன்று (22 ஆம் தேதி - புதன்கிழமை) மாலை 4.00 மணிக்கு கிருஷ்ணகிரி ராயக்கோட்டை ரோடு மேம்பாலம் அருகே கிருஷ்ணகிரி நகர தி.மு.க. சார்பாக அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது திருவுருவ வெண்கல சிலையை திறந்து வைக்க உள்ளார்.

இதனை தொடர்ந்து மாலை 05.00 மணிக்கு கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி அருகே பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ள கலைஞர் அரங்கில் எனது மகள்

ஷிவானி மணமகன் கௌதம் ஆகியோரது திருமண வரவேற்பு விழாவில் இளைஞரணி செயலாளர்- அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

இதனை தொடர்ந்து நாளை (23 ஆம் தேதி) காலை 09.00 மணி முதல்10 00 மணிக்குள் கிருஷ்ணகிரி குறிஞ்சி மஹால் திருமண மண்டபத்தில் கிருஷ்ணகிரி நகர செயலாளர் எஸ். கே. நவாப், கிருஷ்ணகிரி நகர் மன்ற தலைவரும்,

தலைமைச் செயற்குழு உறுப்பினருமான பரிதா நவாப் ஆகியோரது மகன் அமீர்சுஹோல் மணமகள் மாதுளா (எ) ரேஸ்மி ஆகியோரது திருமணத்தை நடத்தி வைக்கிறார்.

இதனை தொடர்ந்து கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட துணை செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான முருகன் அவர்களது மகள் டாக்டர் கனிமொழி (எ) ஜெய்ஸ்ரீ - மணமகன் டாக்டர் நவீன்குமார் ஆகியோரது திருமணத்தை நடத்தி வைக்க உள்ளார்.

இந்த விழாக்களில் தமிழக அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட செயலாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள். ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்அனைத்து அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர், ஒன்றிய குழ பெருந்தலைவர்கள், நகராட்சி தலைவர், பேரூராட்சி தலைவர்கள், கவுன்சிலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் அனைவரும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பெரும் திரளாக கலந்து கொண்டு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பளித்து சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம், ஹோட்டல் சாரதா கிராண்ட் கூட்ட அரங்கில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, மாவட்ட தொழில் மையம் சார்பில், உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 முன்னிட்டு, மாவட்ட அளவிலான கருத்தரங்கத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் நேற்று முன்தினம் (20.11.2023) துவக்கி வைத்து 2024 உலக முதலீடுகள் மாநாட்டிற்கு தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ள முதலீட்டாளர்களிடம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை வழங்கினார்கள். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.த.ஜெயலட்சுமி, மாவட்ட தொழில்மைய பொது மேலாளர் திருமதி.எஸ்.திரிபுரசுந்தரி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம், ஏ.டி.ஆர். திருமண மஹாலில், கூட்டுறவுத்துறையின் சார்பில், 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் டாக்டர் என்.சுப்பையன், அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஐ.சா. மெர்சி ரம்யா ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் (20.11.2023) துவக்கி வைத்து, புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட், சார்பில், "தமிழ் மகள் சிறப்பு தொடர்பு இட்டு வைப்புத் திட்டத்தினை, தொடங்கி வைத்தார்கள். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.த.ஜெயலட்சுமி, நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூடுதல் பதிவாளர் / செயலாட்சியர் (கூ.பொ.) கூடுதல் பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்) ச.சுப்பிரமணியன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இராஜேந்திர பிரசாத், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.